# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய நிதியம் (திருத்தச்) சட்டம்

---

(1998, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

**1998, திசெம்பர் மாதம் 18 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 4.00** **தபாற் செலவு: ரூபா 3.50**

## 1998 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய நிதியம் (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஒ. 58/94

## விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய நிதியக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயர்.

*1.* இச்சட்டமானது, 1998 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய நிதியம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

431 ஆம் அத்தியாயத்தில் 49அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

*2.* விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய நிதியக் கட்டளைச் சட்டமானது, அக்கட்டளைச் சட்டத்தின் 49 ஆம் பிரிவை உடனடுத்து, அக்கட்டளைச் சட்டத்தின் 49 அ என்னும் பிரிவு என்றவாறாகப் பயனுற வேண்டியதான பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

"குறித்த சில விடயங்களில் எல்லா உதவு தொகைகளையும் மீளளித்தல்.

49அ. (1) இக்கட்டளைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எந்தத் தேதியன்று இப்பிரிவு நடைமுறைக்கு வருகின்றதோ அந்தத் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஒரு விதுரரான எந்த உதவுதொகை செலுத்துநர் ஒருவர் பிள்ளைகளின்றி —

(அ) ஒய்வூதியத்தின்மீது பகிரங்க சேவையினின்று இளைப்பாறுகின்றாரோ ;

(ஆ) பதவி துறப்பு, இடமாற்றம் என்பன காரணமாக அல்லது வேறுவகையாக, பகிரங்க சேவையிலிருந்து விலகுகிறாரோ ; அல்லது

2 — டீ 049831 — 1,100 (98/09)

(இ) பகிரங்க சேவையிலிருக்கும் போது இறக்கின்றாரோ, விடயத்துக்கேற்றாற் போன்று, அத்தகைய உதவுதொகை செலுத்துநர் அல்லது அத்தகைய உதவு தொகை செலுத்துனரின் சட்டரீதியான சொந்தப் பிரதிநிதி, அத்தகைய உதவு தொகை செலுத்துனரின் எல்லா உதவு தொகைகளையும், அத்துடன் அதன்மீது ஆண்டொன்றுக்கு இரண்டரை நூற்று வீதக் கூட்டுவட்டியுடன் சேர்த்து, மீள ளிப்பு ஒன்றைப் பெறுவதற்கு உரித்து டையவராதல் வேண்டும் :

ஆயின், எந்த உதவுதொகை செலுத்துநர் ஒருவர் ஐம்பத்தைந்து வயதை அடையுமுன்பு பகிரங்க சேவையிலிருந்து இளைப்பாறி யுள்ளாரோ அல்லது அதனை விட்டுவிலகி யுள்ளாரோ அந்த உதவுதொகை செலுத்துநர் ஒருவர், அவர் அத்தகைய வயதை எய்தும் வரை அத்தகைய மீளளிப்புக்கு உரித்துடைய வராதலாகாது.

(2) இப்பிரிவின்கீழ், எந்த உதவுதொகை செலுத்துநர் மீளளிப்பொன்றைப் பெற்றுக் கொள்ளுகின்றாரோ அந்த உதவுதொகை செலுத்துநர் எவரும், நிதியத்தின் மீது மேலதிக கோரிக்கை எதனையும் கொண்டிருத்தலாகாது.

(3) இக்கட்டளைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எந்தத் தேதியன்று இப்பிரிவு நடைமுறைக்கு வருகின்றதோ அந்தத் தேதிக்கு முன்னர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எந்த உதவுதொகை செலுத்துநர், உதவுதொகை செலுத்துநர் எவரும், அத்தகைய மீளளிப்பை அதன்மீது ஆண்டொன்றுக்கு இரண்டரை நூற்றுவீதக் கூட்டுவட்டியுடன் சேர்த்து சொல்லப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குள்ளாகத் திருப்பிக் கொடுத்தால் மாத்திரமே இப்பிரிவின் நன்மையைக் கோரலாம்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கு மிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.